Literacy for a Billion

Movie: Thirumalai
Year: 2003

Song: Neeya Pasiyathu
Lyricist: Vairamuthu

நீ என்பது
எதுவரை எதுவரை
நான் என்பது
எதுவரை எதுவரை
நாம் என்பதும்
அதுவரை அதுவரைதான்
வாழ்வென்பது
ஒருமுறை ஒருமுறை
சாவென்பதும்
ஒருமுறை ஒருமுறை
காதல் வரும்
ஒருமுறை ஒருமுறைதான்
நீயா பேசியது
என் அன்பே
நீயா பேசியது
தீயை வீசியது
என் அன்பே
தீயை வீசியது
கண்களிலே
உன் கண்களிலே
பொய் காதல் நாடகம் ஏனடி
அன்பினிலே
மெய் அன்பினிலே
ஓர் ஊமை காதலன் நானடி
நீயா பேசியது நீயா பேசியது
நீயா பேசியது நீயா பேசியது
நீ என்பது
எதுவரை எதுவரை
நான் என்பது
எதுவரை எதுவரை
நாம் என்பதும்
அதுவரை அதுவரைதான்
வாழ்வென்பது
ஒருமுறை ஒருமுறை
சாவென்பதும்

ஒருமுறை ஒருமுறை
காதல் வரும்
ஒருமுறை ஒருமுறைதான்
ஓ...
ஏதோ நானிருந்தேன்
என் உள்ளே
காற்றாய் நீ கிடைத்தாய்
காற்றை மொழி பெயர்த்தேன்
அன்பே சொல்
மூச்சை ஏன் பறித்தாய்
இரவிங்கே பகங்கே
தொடுவானம் போனதெங்கே
உடல் இங்கே உயிர் இங்கே
தடுமாறும் ஆவி எங்கே
உருகினேன்
நான் உருகினேன்
இன்று உயிரில் பாதி
கருகினேன்
நீயா பேசியது
என் அன்பே
நீயா பேசியது
வேரில் நான் அழுதேன்
என் பூவும் சோகம்
உணரவில்லை
வேஷம் தரிக்கவில்லை
முன்னாளில்
காதல் பழக்கமில்லை
உனக்கென்றே
உயிர் கொண்டேன்
அதில் ஏதும் மாற்றமில்லை
பிரிவென்றால் உறவுண்டு
அதனாலே வாட்டம் இல்லை
மறைப்பதால்
நீ மறைப்பதால்
என் காதல் மாய்ந்து போகுமா

நீயா பேசியது
என் அன்பே
நீயா பேசியது
தீயை வீசியது
என் அன்பே
தீயை வீசியது
கண்களிலே

உன் கண்களிலே
பொய் காதல் நாடகம் ஏனடி
அன்பினிலே
மெய் அன்பினிலே
ஓர் ஊமை காதலன் நானடி
நீயா பேசியது நீயா பேசியது

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.